# குளியாப்பிட்டி பிரதேச சபை
# குருணாகல் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 செப்தெம்பர் 12 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் குளியாப்பிட்டி பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக உரிய கணக்கு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள எனது அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான குளியாப்பிட்டி பிரதேச சபையின், செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணமாக வருமானக் கடன்பட்டோரின் கீழ் ரூபா 31,657,999 தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ள உள்ளவாறான நிலுவை முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 11,000,000 ஆனமையால் மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 20,657,999 தொகை அதிகரித்துக் கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது.

## 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

### கணக்காய்விற்காக தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 17,311,269 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

## 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 23,915,625 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 40,610,717 ஆக இருந்தது.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் நிதிக் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நீண்ட காலமாகக் கொண்டுவரப்படுகின்ற 7 கணக்கு விடயங்களின் கீழ் காணப்பட்ட ரூபா 165,101 வரவு மீதியும் 4 கணக்கு விடயங்களின் கீழ் காணப்பட்ட ரூபா 859,747 செலவு மீதியும் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொது வங்கிக் கணக்கில் மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்திற்குரிய வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கும் போது பிரதான காசேட்டின் மீதியான ரூபா 10,225,289 தொகைக்குப் பதிலாக பேரேட்டுக் கணக்கின் பிரகாரமான ரூபா 10,595,805 தொகையான மீதி கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. அவ்வாறே இந்த இரண்டு மீதிகளுக்குப் புறம்பான மீதியான ரூபா 10,606,004 பெறுமதி ஐந்தொகையில் காசு மீதியின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) பொது வங்கிக் கணக்கின் 2011 திசெம்பர் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்தும் மாற்றப்படாத ரூபா 3,604,456 தொகையான மீதியில் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளிலிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 350,990 பெறுமதியான 83 காசோலைகளும் காணப்பட்டன.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட கடன்பட்டோர் மீதியினுள் ''அரசின்பகுதிச் சேவை'' இற்கான ரூபா 11,000 தொகை மீதி காணப்பட்டதுடன் அது நீர் செயற்திட்டத்திற்கு ஈடுபடுத்தப்பட்ட ஆலோசனையாளரின் கொடுப்பனனவிலிருந்து அறவிடப்பட்ட தொகையாக இருந்ததுடன் அது மீளாய்வாண்டு இறுதிவரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 288 | 291 | 93 |
| (ii) | வாடகை | 3,721 | 4,551 | 74 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 732 | 810 | 66 |
| (iv) | ஏனைய வருமானம் | 57,259 | 58,155 | - |

### 2.3.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 7,483,641 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 36,379,611 |

## 2.4 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய பௌதீக வளங்கள்

சபைக்குரிய ரூபா 1,285,000 பெறுமதியான வீதிச் செப்பனிடுகை 4 வருடங்கள் மட்டிலான காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

## 2.5 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேன்கொள்ளப்பட்டன.

(அ) முகாமைத்துவ சேவையின் உயர் வகுப்பிலுள்ள பதவியான செயலாளர் பதவி 2009 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் உள்ளூராட்சி உத்தியோகத்தரினால் வேலை கவனிக்கப்பட்டிருந்தது. சபைக்குரிய அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பவியலாளர் பதவிகள் 4 எண்ணிக்கையாக இருந்த போதிலும் 2 பதவிகள் ஒரு வருட காலத்திலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்டது. அவ்வாறே வருமான கட்டுப்பாட்டு உத்தியோத்தர்களின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 4 ஆக இருந்த போதிலும் ஒரு பதவி 3 வருட காலத்திலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்டது.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்களின் கீழ் தொழிலாளர், சாரதி போன்ற பதவிப் பெயர்களின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 53 ஆக இருந்ததுடன் நிரந்தர ஊழியர்கள் 45 பேர் அளவில் சேவையில் ஈடபடுத்தப்பட்டிருந்த போதிலும் அமைய, நாட்கூலியின் அடிப்படையில் சபையிலிருந்து சம்பளம் பெறுகின்ற 6 ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(இ) சபையின் அங்கீகரிக்கப்பட்ட வீதித் தொழிலாளர்களின் எண்ணிக்கை 26 பேராக இருந்ததுடன் மீளாய்வாண்டு வரையில் 23 பேர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தும் இந்த தொழிலாளர்களில் அனேகமானவர்கள் தமது உள்ளவாறான கடமைகளுக்குப் புறம்பான வெற்றிடங்களில்லாத சாரதி, அலுவலக தொழிலாளர்கள் போன்ற பதவிகளில் நியமிக்கப்பட்டிருந்தனர். வீதித்தொழிலாளர் ஏனைய கடமைகளுக்கு ஈடுபடுத்தப்பட்டிருந்தமையால் நேர்க்கூலி அடிப்படையின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வேலைகளில் நேர்க் கூலியின்

தேவைகளை நிறைவேற்றுதவற்கு நாட்சம்பள அடிப்படையில் தற்காலிக தொழிலாளர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர்.

## 2.6 ஒப்பந்த நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

பிரதேச சபை 2010 ஆம் ஆண்டின் போது நேர்க்கூலி அடிப்படையின் கீழ் ரூபா 66,964,572 தொகையான 62 நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் தெரிவுப் பரிசோதனைகளின் போது உள்ளூராட்சி ஆணையாளர் (வடமேல்) 2007 யூன் 01 ஆந் திகதிய 2007/3/தொழில்நுட்ப ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் பின்வரும் தொழில்நுட்ப அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(i) நிர்மாணங்களுக்கான சாத்தியவள அறிக்கை, ஏபீசீ கலவை பொறியியல் தரத்தில் உள்ள உயரத்தைக் காட்டும் அறிக்கை.

(ii) இயந்திரமொன்றை ஈடுபடுத்தி நிறைவேற்றப்படுகின்ற செயற்பாடுகளுக்கான மீற்றர் மணித்தியால எண்ணிக்கை

(iii) மதிப்பீடு மற்றும் அளவுப் பத்திரங்களில் அளவிடைகளும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய விபரம்

(iv) பூர்த்தி செய்யப்பட்ட வேலை அறிக்கையின் பிரகாரம் செலவின அறிக்கை

(v) மூலப்பொருள் மற்றும் நேர்க்கூலி விடயங்களை உள்ளடக்கிய இலாப நட்ட அறிக்கை

(vi) மதிப்பிடப்பட்ட கல், மணல் கொள்வனவுகளுக்குரிய கூறுவிலை கோரப்பட்ட விபரங்கள்

## 2.7 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 10 வருடங்களுக்கு முன்னர் வேலை தடை செய்யப்பட்ட உத்தியோத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 141,761 தொகையான கடன்

மீதயை சபை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் தற்போது அந்த உத்தியோத்தர் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டிருந்தார்.

(ஆ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக்கோவையின் 228 ஆவது விதியின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரதேச சபையில் சேவையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய நிதியத்திற்குப் பங்களிப்புப் பணம் செலுத்த வேண்டிய ஊழியர்களுக்கு சபையினால் அந்நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணம் உரிய பிரகாரம் செலுத்தப்படாமையினால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்த நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 1,218,448 ஆகக் காணப்பட்டது.

(ஆ) நிறுவனத்திற்குரிய கூட்டிணைந்த திட்டம் மற்றும் மீளாய்வாண்டிற்குரிய செயல் நடவடிக்கைத்திட்டம் என்பன காணப்படவில்லை.

## 2.8 உள்ளகக் கணக்காய்வு

சபையில் போதியளவில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிருவாகம்